செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100


**பயிலரங்கத் தொடர் எண்ணிக்கை: 125** **நாள்: 11.06.2026**

**பள்ளித் தமிழ் ஆசிரியர்களுக்கான இலக்கணம் கற்பித்தல் (இணைய வழி)**

**Tamil Grammar Teaching Programme for School Tamil Teachers (Online)**

**பயிலரங்கம் – 6**

(18.06.2026 – 24.06.2026)

**அறிவிப்பும் அழைப்பும்**

தமிழ்மொழி மிகவும் தொன்மையான மொழியாக இருப்பது மட்டுமல்லாமல் மிக நீண்ட இலக்கிய இலக்கண மரபுகளைக் கொண்டுள்ளது. இலக்கணம் தோன்றுவதற்கு முன்பே இலக்கியம் தோன்றியது என்பதை, **‘இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்’** என்பார் நன்னூலார். இலக்கியத்தைப் புரிந்து கொள்வதற்கும் மொழியைச் செம்மையாக்குவதற்கும் விதி விலக்குகளை விளக்குவதற்கும் உறுதுணையாக இலக்கணம் இருக்கிறது. மொழியைப் பிழையின்றி பேசுவதற்கும் எழுதுவதற்கும் இலக்கணம் பயன்படுகிறது. அதனால் இலக்கணத்தைக் கற்றுக் கொள்ளுதல் என்பது இன்றியமையாததாக அமைகிறது. அதனைக் கருத்தில் கொண்டு **‘பள்ளித் தமிழ் ஆசிரியர்களுக்கான இலக்கணம் கற்பித்தல்’** என்னும் பொருண்மையில் அமைந்த பயிலரங்கை இணைய வழியில் நடத்த செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திட்டமிட்டுள்ளது. பயிலரங்கில் இத்துறை சார்ந்த அறிஞர்கள் பயிற்றுரை வழங்க உள்ளனர்.

இப்பயிலரங்கு 18.06.2026 முதல் 24.06.2026 வரை 07 நாள்கள் இணைய வழியில் நடைபெறவுள்ள நிலையில் **பள்ளிகளில் பணியாற்றும் தமிழ் ஆசிரியர்கள்** மட்டும் கலந்து கொண்டு பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

- பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - **250.**
- பயிரலரங்கு நடைபெறும் நாள்கள்: **18.06.2026 முதல் 24.06.2026 வரை 7 நாள்கள்.**
- பயிலரங்கு நேரம்: **மாலை 06.30 – 08.30.**
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/mPgEQE3VrC7w3H9V8 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு **(QR Code)** மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **16.06.2026.** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் எற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **17.06.2026** அன்று மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் **14** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாகக் கலந்துகொள்வதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**